
குரு
பாலகுமாரன்
GOODWILL'S

# குரு

கூர்மையான புத்தியும், தெளிவான சிந்தனையும், மிருதுவான பேச்சும், அமைதியான குணமும் உடையவராக அந்த வழிகாட்டி இருந்தால்தான் அவர் மீது நம்பிக்கை பிறக்கும்.

இடதா, வலதா என்று தேர்ந்தெடுக்க மட்டுமே வழிகாட்டி உபயோகப்படுவதில்லை. லௌகீக நெறிமுறைகளிலும் ஆயிரம் சிக்கல்கள் இருக்கின்றன. அவைகளுக்கும் வழிகாட்டி விடையளிக்க வேண்டும். வாழ்க்கை மேம்பாடு அடைய உதவ வேண்டும்.

இந்த வழிகாட்டிக்கு இந்து தத்துவம் குரு என்று பெயர் சொல்கிறது. இந்த குருவை மிக உயர்ந்த நிலையில் இந்து மத வாழ்க்கை வைத்திருக்கிறது. குருவே தாயும் தந்தையுமானவர். குருவே தெய்வ வடிவம் என்று புகழ்ந்து பேசுகிறது.

என் தாய் நான் வேண்டுமென்று சூல் கொள்ளவில்லை. அவள் தன் புருஷனுக்கு கட்டுப்பட்டு அவருக்கு சுகம் கொடுத்ததின் காரணமாக சூலுற்றாள். தன்னை மலடி என்று ஊர் சொல்லாத நிம்மதி என்னால் அவளுக்கு கிடைத்தது.

என் தந்தை நான் வேண்டுமென்று தவம் செய்யவில்லை. தன் சுகத்திற்காகவும், தன் ஆண்மையின் நிரூபணத்திற்காகவுமே எனக்கு தகப்பனானார்.

தெய்வத்தை நான் அறிந்ததில்லை. தெய்வம் என்னை அறியுமோ என்று எனக்கு தெரியாது.

ஆனால் குருவே எனக்காக வந்தீர். என்னை தேடி வந்தீர்.

என் மீது கொண்ட கருணையினால் எனக்கு தாயானீர். என் வளர்ச்சி பற்றி கவலைப்படுவதினால் தந்தையாகினீர். சிறிதும் பெரிதுமான பிரச்சினைகளில் இருந்து என்னைக் காப்பாற்றுவதினால் எனக்கு தெய்வமானீர்.

குருவே நீரே சிவன், நீரே விஷ்ணு, நீரே பிரும்மா, நீரே ஆதி கடவுள் என்று இந்து தத்துவம் கைகூப்பி மெய்விதிர்த்து கண்ணீர் ததும்ப நமஸ்கரிக்கிறது.

ஒரு நல்ல குரு கிடைக்க மிகவும் பிரயத்தனப்பட வேண்டும். இடைவிடாது தேட வேண்டும். அந்த தேடல் உன்னை உயர்த்தும். அப்படி ஒரு உயர்நிலைக்கு வரும்பொழுது குருவே உன்னை தேடி வருவார் என்று சொல்கிறது.